உ

சிவராமஜெயம்.

15 சிறுத்தொண்ட

# நாயனார்சரித்திரம்.

இஃது,

சிறுமணவூர்,

முனிசாமிமுதலியா

ரவர்களால் இயற்றப்பட்டு,

தமது

சென்னை சூளை,

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1905.

18

உ

கடவுள் துணை.

# சிறுத்தொண்ட நாயனர் சரித்திரம்.

விநாயகர் துதி-வெண்பா.

பூமாதுநாயகனும் பொன்னுலகைச்சூழமரர்
கோமானுங்கோழிக் கொடியோனும்-சாமான்
கரத்தானுமானும் கருணைமொழியைந்து
கரத்தானிருதாளே காப்பு.

விருத்தம்.

மூன்றுபத்திரண்டேயென்னும் முன்னவருரையைத்தேர்ந்து
தான்பரமதற்குயீடு தாவெனப்பரங்களுக்கு
நோன்பென அன்னமீந்து னுட்பொருளறியவென்றே
கூன்மதிஜடிலனண்ட குரையினிவிளம்புவேனே.

சிவனடியாரைக்காணுமல் சிறுத்தொண்டர்புலம்பல்.

சிவசாம்பவசிவசாம்பவ சிவசாம்பவசிவமே
தவமேபுரியடியார்களைக் காணேமென்னபவமே (சிவ)

அன்னமதுபடைக்கவென்று லடியார்களைக்காணேன்
முன்னாள்விதிப்பயனோ யெவர்முரையோ வொன்றுந்தெரியேன்

என்விதியோஉன்செயலோ யீசாவொன்றுந்தெரியேன்
அன்னக்கொடிக்கொருபழுதும் அடாருதருள்சிறியேன் (சிவ)

புனலுடையசடையோயிது புதுமையெனத்தகுமே
மனம்நோகுதென்செய்வோ னுணையன்றியெங்குபுகுவேன் (சிவ)

விடிந்தயிதுபொழுதளவும் வீதியெங்குந்திரிந்தேன்
முடிந்ததிந்நகர்முழுதும் உன்னடியர்காணேன் (சிவ)

பொது-விருத்தம்.

சிவனடியாரைத்தேடி சிறுத்தொண்டர்மனதுவாடி
தவமதுபொய்யோயெந்தன் தலைவிதியிதுவோவென்று
அவனியில்முழுதும்வோடி அடவியைநாடும்வேளை
இவரதுமனதைக்காண ஈஸ்பரர்தோன்றினரே.

## சங்கமரை சிறுத்தொண்டர் அழைத்தல்.

சரணம்சரணம் சரணமையனே சிவசங்கரர்போல்
சாமியும்மைக்கண்டுதேர்ந்தனே

தருணம்தருணம் யெழுந்துவாருமே ஐயா ஐயா
தாளடிமைமுகத்தைப்பாருமே

கொடுக்கும்விரதம் விலகிடாமலே ஐயா ஐயா
கொண்டால் வெகுபுண்யமுலகிலே

காலம்வீணுய் செல்லலாகுதே ஐயா ஐயா
கறிவகையின் பாகம்சோருதே

ஜாலம்செய்ய வேளையல்லவே ஐயா ஐயா
சமயல்செய்து நாழியாகுதே

## சங்கமர்சொல்-விருத்தம்.

அழைத்ததுமெய்தான்கண்டா யாசாரக்கள்ளாகேளாய்
குழைத்திடுங்கள்ளாவீணுய் கும்பிடேன்யெழுந்துநில்லாய்
செழித்தவுன்மடத்திலேதான் செய்தநற்கறியிதென்று
வழுத்திஞல்தடையேதுண்டு வகையினமுரைத்திடாயே

## சிறுத்தொண்டன்சொல் பதார்த்தவகை.

ஜங்கமரேமடத்திலின்று சமைத்தகறியுரைத்திடக்கேள்
துங்கமுறுபுடலையுடன் கடலைரெண்டுங்கூட்டமுது
தங்கநிறப்பூசினிக்காய் தனிக்கறிதான்பொரிக்கதலி
திங்களைப்போல்பச்சடியாம் தினைவளமேமாதக்கனி
உங்கள்மனதிரங்குமையா உலவற்கேயமைத்தகறி
உரைத்தனின்னம் வருத்தமென்ன
சிறுத்தொண்டனென் னகத்திலேதான்
கத்தரிக்காய்பொரியலுண்டு கருணைவடைதுவட்டலுண்டு
முத்தலிலாமுருங்கைக்கனி முந்திரியின்பருப்பிவைகள்
அத்திக்கனிகூட்டுடனே ஆவினதுபால்கறியும்
நித்தனதுதொண்டரேநின் நினைவதையென்வசப்படுத்தும்
நீர்வருவீரென்மனைவி பார்த்திருப்பாள்வழிதேடி
ஆமவடைமோர்குழம்பு அருந்தனல்லஉளுந்துவடை
தாமணிபோல்முளகுவடை தொக்கதுபோல்பாயசமும்
சோமனெனதயிர்வடையும் சொல்லியின்னமனந்தவகை
ஆகுமிந்தபடிதினத்துக் காயிரம்பேர்க்கமுதளித்தேன்
அய்யரேயின்றொருவருக்காய் மெய்சலித்தயென்கொடுமை
ஆரறிவார்பரனையன்றி கருணைவைத்துவாரும்சுவாமி

### ஜங்கமராகிய சாமிசொல் விருத்தம்.

ஆரடாபாவியிந்த அனியாயமுலகிலுண்டோ
பாரருளீசனார்தன் பத்தரையெல்லாங்கொன்றுய்
ஊரினில்மருந்துபோல ஒண்டியாயிருக்குமென்னை
கோரிநீயழைத்துபோயி கொன்றிடநினைத்திட்டாயே.

### சிறுத்தொண்டன்சொல் விருத்தம்.

அறியாமற்செய்தேதீர்ந்த அனியாயமெல்லாமையா
பிரியமாய்மனதுகூர்ந்து பேதையான்செய்யும்வாரை
தெரிவரவுரைத்தீராகில் திருவுளப்படியேயின்று
சிரியனென்னுழப்பையெல்லாம் சீக்கிரம்நடத்துவேனே.

### ஜங்கமருக்கும் சிறுத்தொண்டனுக்கும் தர்க்கம்.

அன்னமிடசத்தியிருக்குதா-என்னை
அழைத்ததுவெரும்பொய்யோ உரைத்திடாய்
உன்னைத்தானேசிறுத் தொண்டனென்றுலகிலே
பின்னுமுன்னுமாகப் புரளிசொல்கின்றுரே (அன்)

சத்தியில்லாமலே அழைப்பனோ-ஐயாநான்
சாப்பிடவாவென்று முழிப்பனோ
நித்தம்நித்தம்பத்த ராயிரம்பேருக்கு
சுத்தமாயளித்தவன் சாமினீயொருத்தற்கு (சத்)

ஐந்துவயதுபிள்ளைவேணுமே-பத்தா
அறுந்தவத்தால்வந்ததாகுமே
தொந்தியிலீரைந்து மாதமாய்சுமந்தவள்
சிந்தைகலங்காமல்சந்தோஷமாய்கொய்து (அன்)

எனக்கேயொருபிள்ளை இருக்குதே-அது
யெண்ணரியவித்தை கற்றதே
மனதிற்கவலைவேண்டாம்மற்றேரெண்ணமுவேண்டாம்
நினவின்படியேயின்று நடத்திபுரிவேன்தொண்டு (என)

அன்னைமனமென்ன வெறுப்பாளோ-பத்தா
அறுக்துசமைத்திட பொறுப்பாளோ
முன்னலீன்றபோது முகமனங்குளிர்ந்தாப்போல்
இன்னளிருவரும் யேந்திபறித்ததுதான் (என)

அறுத்துசமைத்துனன் படைக்கிறேன்-ஐயா
அடிமையுன்மனம்போலே நடக்கிறேன்

சிறிதும்கவலைவிட்டு சிறியேனென்னகமட்டும்
கருணைப்பொழியாவிட்டால் கறுத்தின்படியேகிட்டும் என

பொதுவிருத்தம்.

ஜங்கமர்கருத்தின்போலே சமைத்துநான்படைப்பேனென்று
அங்கவர்க்குறுதிசொல்லி அகமதைநாடியேதான்
மங்கையென்சொல்லுவாளோ மனமதைபறியேனையோ
திங்களையணிந்தஅய்யா சிவமெனப்புலம்புவாரே,

(வ-ம்) ஜங்கமர் கருத்தைப்போல பிள்ளைக்கறி தருவேனென்று உறுதிசொல்லிவிட்டு தன்மனைவி என்னசொல்லுவாளோவென்று புலம்பிக்கொண்டு வருகிறவிதங்காண்க.

சாமாராகம்-ஆதிதாளம்-புலம்பல்.

சிவசிவாயெந்தன் தேவியானவள் சிறுவனைக்காற்காளோ விரதங்காற்பாளோ துயர்கோற்பாளோ செய்வாளோ மகனைகொய்வாளோ என்னை வைவாளோ வைவாளோ வைவாளோ.

ஜங்கமற்குனன் உறுதியாய்சொன்ன / வாக்கியந்தாட்டுமோ ஜெயங்காட்டுமோ பழிநாட்டுமோ தென்னவன்றன்னை மண்ணில் வீழ்த்திய தெய்வமே தெய்வமே,

தெய்வமேயெந்தன் தேவியின்மனம் துணியவும் அறியேன் ஏதுபுரிவேன் மிகச்சிறியேன் திங்களின்சடைசங்கருயெந்தன் பங்கில்வா பங்கில்வா.

(வ-ம்) இவ்விதமாய்ப் புலம்பிக்கொண்டே ஒருபிள்ளையார் கோயிலில்வந்து பொன்னினுலும் தங்கத்தினுலும் ஆலயங்கட்டுகிறேன் மனைவிமனதை வசமாக்கவேணுமென்று பிரார்த்தனைசெய்துகொண்டு வீட்டுக்குவந்து நடந்தசேதியைச்சொல்ல உடனே மனைவி சம்மதித்து சீருளனை அழைத்துவர உத்தரவுதந்தால் அத்தருணத்தில் சீராளன்பள்ளியில் சயனித்து கினவுகண்டு திடுக்கிட்டு ஐயருக்குச்சொல்லுகிற விதங்காண்க.

சீராளன் பள்ளியில் கினவுகண்டது.

அயரேநானென்னசொல்வேன் அற்புதங்களானசேதி
கண்டனேகினவுகண்டனே.

அன்னைமொழிகேட்டு என்னை தந்தைவந்தழைத்திடவுங் கண்டே
தந்தையென்னைதோளில்வைத்து தையலிடங் கொண்டுபோக
நீருட்டி சீருட்டி நேர்த்தியானபணிகள்பூட்ட கண்டனே

பட்டுடுத்திபொட்டுமிட்டு தொட்டிலிட்டுதாலாட்ட கண்டனே
தாலாட்டிஆலாத்தி தந்தையெந்தனைபிடிக்கக் கண்டனே
தந்தைபிடித்ததிடவும் தாயாரறுத்திடவுங் கண்டனே
கால்கரங்கள்வேறுவேறாய் கண்டதுண்டமாகச்செய்ய கண்டனே
தலையையறுத்ததுவோர் தனிப்புறமாய்வைத்திடவுங் கண்டனே
மார்பின்கரிபொரித்து மணிக்குடல்குழம்புசெய்ய கண்டனே
ஈரலைவேறாய்சமைத்து இருதுடைதுவட்டல்செய்ய கண்டனே
கால்களைவேறாய்சமைக்க கைகளைவேறாய்சமைக்க கண்டனே
பெற்றெடுத்தன்னைஎன்னைபத்தெட்டுவிதஞ்சமைக்க கண்டனே
பத்தெட்டுவிதங்கண்டேன் பண்டாரக்கிழவர்வரக் கண்டனே
வந்தவற்குஅன்னை தந்தை வந்தனங்கள்செய்திடவுங் கண்டனே

பொதுவிருத்தம்.

கண்டதோர்கினவையெல்லாம் கருத்துடனையருக்கு
விண்டிடும்போதுபாலன் விரைவுடன்தகப்பனை
தொண்டரும்பள்ளிசேர்ந்து தூரத்துசேதிசாலக்
கொண்டுவந்தவரைப்போலே கூப்பிட்டேயழைக்கலுற்றார்.

சிறுத்தொண்டன் சீராளனையழைத்தல்,

வாடாயென துசெல்வமே-வள்வுக்கேக
வாடாயென துசெல்வமே

வாடாவளவுக்கேக வாறானது அம்மான்
கோடாதெழுத்தாணி கொண்டுவந்தானுனக்கு (வா)

சீராளன்-வசனம்.

ஆஎன் அய்யரே என்னைபிரியமாய் பார்க்கவேணுமென்று அம்மான் வந்திருக்கிறாராம் செலவுதாருமையா சற்குருவே,

வாத்தியார்-வசனம்.

அப்படியே சுகமாய்ப் போய்வருவாயடா சீராளதேவா,

அறுத்திடத்துணிந்தாரே-மகனை சமைத்திடழனைந்தாரே
வருத்தமில்லாமலே வாங்கியசூரியால்
சிரமதைதுணித்துபின் கரமுதலுடல்வேறாய் (அறு)

பலவிதம்சமைத்தாரேபிள்ளைக்கறி-படைத்திட அழைத்தாரே
வலம்பிடமாய்வந்து வணங்கியேதொழுதேற்றி
யிலைதனிற்படைத்தேன் யெடும்யெடும்புசிப்பென்று (பல)

கும்மி.

வாறியே சோறுகறி படைத்தாளந்த மங்கைதிருநங்கை கை

யாலே சாரியதாகவே புத்துருக்கு நெய்யுந் தீர்ரைவிட்டோடவே வார்த்துகின்றாள். 1

உடற்கழிவைத்ததே யல்லாதுபின் தலைக்கறியில்லையே தொண்டனேபார், நடக்கையுனக்கிதுவோ வெனச்சொல்லப்பின் நாயனருந்திரு நங்கைதனை, 2

திங்கள்முகத்தாளே பெண்ணரசேதலை எங்கேயென்றுதானுங் கேட்டிடவே, மங்களமாகச்சீராளன்தலைதனை மாலுஞ்சமைத்துக் கறிபடைத்தாள், 3

என்றுவாருஞ்சிறுத்தொண்டரே இப்போதிருந்து அமுதுண்ணவோர்குழந்தை, சென்று அழையுமென்றே யுரைக்கச்சிறுத்தொண்டனுமப்போது சொல்லுகிறார், 4

ஈஸ்பரன்தந்தது ஓர்குழந்தைதனை இப்போதுமக்குக் கறியாக, காசினியெங்குந் தழைத்தோங்கக் கயிலாசர்கிருபை யதனலே,

கொண்டுவந்துகறிதான்சமைத்தே னென்குலக்கொழுந்தாகியபாலகனை கண்டிருந்தும்பாலன் வேணுமென்றால் எந்தன் கர்த்தாவே யென்செய்வே னென்றுசொல்லி, 6

தாராளமாக நமஸ்கரிக்கச்சித்தர் சந்தோஷமாய்த் திருவாக்குரைப்பார், பாராளும்பாலகன் பேரைச்சொல்லிநீயும் பாதையிலேநின்று தானழையும், 7

என்றுசிறுத்தொண்டனுக்குரைக்க அப்போ ஈஸ்பரன்றனை நமஸ்கரித்து சென்று சீராளனைத்தானழைக்கச் சிறுத்தொண்டனு மப்புரந்தானேகி, 8

முச்சந்திவீதியில் தொண்டரழைக்கவேமுன்னுகச்சீராளனேடிவந்து, அச்சமில்லாமலே பாலகனுமப்போ அய்யாயிதோவந்தேனென்றுவந்தான். 9

சிந்தைகலங்கிமெலிந்துடல்வாடியே செப்புவாரேசிறுத்தொண்டருந்தான், வந்ததோராண்டி மாதேவனல்லால்வேறு மாமுனியில்லையென் றேகினைந்து, 10

சந்திரசேகரனேசரணஞ் சிவசங்கரனே சரணஞ்சரணமையா இந்தவேளையினில்வந்து ரெட்சித்துநீ எங்களைக்காப்பாற்றவேணுமென்ன, 11

இப்படியாக இவர்கள் துதிக்கப்பின் ஈஸ்பரனருடமாய் கையினல் செப்பும்விமானம் ஒன்றைப்போவரச்செய்து சிறுத்தொண்டற்குந் திருநங்கையற்கும். 12

பாலகனனசீராளனுக்கும் இவர் பாங்கியர்சந்தன நங்கையர்க்கும், சாலோகசாமீபசாரூபமேலான சாயுச்யமென்ற பதங்கொடுத்தார். 13

## சிறுத்தொண்டருக்குசொல் விருத்தம்.

சிறுத்தொண்டா வுனதுவுள்ளம் சிறுத்தொண்டா அறிந்தேனப்பா, சிறுத்தொண்டா உன்னைப்போல ஜெகமதி லெவருங்காணேம், சிறுத்தொண்டா உனதுபாலன் சிறுத்தொண்டா யிந்தாயிந்தா, சிறுத்தொண்டாபதமுந்தந்தேன்சுகமினிவாழ்வாய்தானே.

## மங்களம்.

மங்கனம் செயமங்களம் நித்ய
மங்களம் சுபமங்களம்

ஐங்கரக்கடவுட்குமங்களம் யெங்களருமுகதேவர்க்கு மங்கள
மங்கைபார்வதிக்குமங்களம் மான்மழுமதிசடையர்க்கு மங்கள
சிறுத்தொண்டபத்தற்குமங்களம் செல்வசீருளதேவர்க்கு மங்கள
அறுபத்துமூவர்க்குமங்களமிந்த அவனியிலுள்ளோர்க்கு மங்கள
வெண்காட்டுநங்கைக்குமங்கள மந்தவிஷ்ணுலகோர்க்கு மங்கள
கண்ணன்திருமகட்குமங்கள மிதைகருத்தாய்படிப்போர்க்கு மங்

சிறுத்தொண்டநயனர் சரித்திரம்

முற்றிற்று.

---